உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன். மீகா 7 : 15

எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்தது போலவே . . .

வாக்குத்தத்தத்தை விருப்பத்தோடு வாசிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்தது போலவே **உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்** என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்தவைகள் என்ன ?

சங். 78 : 12 – 16

அவர்களுடைய பிதாக்களுக்கு முன்பாக எகிப்து தேசத்து சோவான் வெளியிலே அவர் அதிசயமானவைகளை செய்தார்.

கடலைப் பிளந்து, அவர்களைக் கடக்கப் பண்ணி, ஜலத்தை குவியலாக நிற்கும்படி செய்தார்.

பகலிலே மேகத்தினாலும், இரா முழுவதும் அக்கினி வெளிச்சத்தினாலும், அவர்களை வழி நடத்தினார்.

வனாந்தரத்தில் கன்மலைகளைப் பிளந்து, மகா ஆழங்களிலிருந்து தண்ணீரை அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தார்.

கன்மலையிலிருந்து நீரோட்டங்களைப் புறப்படபண்ணி, தண்ணீரை நதி போல ஓடிவரும்படி செய்தார்.

முதலாவதாக, கடலைப் பிளந்தார், மதிலாக நிற்கச் செய்தார், ஜனங்களைக் கடக்கச் செய்தார்.

ஆம், சகோதரனே, சகோதரியே, கர்த்தர் கடலை பிளந்தார். இந்த தேவன் கடலைப் பிளந்தது மட்டுமல்ல, ஜலத்தை குவியலாக நிற்கும்படி செய்தார்.

எத்தனை ஆச்சரியம். கடல் பிளந்ததே பெரும் அற்புதம், அதிலும் ஜலமானது குவியலாக மதிலாக, இருபுறம் நிற்கிறதென்றால் எத்தனை பெரும் அற்புதம் !

ஆம் ! உங்கள் கண்களுக்கு முன்பாக நிற்கிற பெரும் பிரச்சினைகளையே, கர்த்தர் உங்களுக்கு சாதகமாக மாற்றி உங்கள் எதிராளிகளையே உங்கள் பக்க பலமாக மாற்றுவார்.

வேதம் சொல்கிறது,

ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார். – என்பதாக.

மேலும், எவர்கள் உனக்கு விரோதமாக எழும்பினார்களோ, அவர்கள் உன் பட்சத்தில் வருவார்கள் – என்பதாக, அல்லேலூயா !

ஒரு அருமையான பாடலில் கீழ்க்கண்ட வரிகள் எழுதப்பட்டுள்ளது.

மலைபோல வருவதெல்லாம் பனிபோல் மறைந்திடுமே
உன்னதரின் கிருபைகளும் உந்தனைச் சூழ்ந்திடுமே
தேசமே பயப்படாதே மகிழ்ந்து களிகூரு,
மன்னவன் இயேசு உன் நடுவில்
மாபெரும் காரியம் செய்திடுவார் – ஆமென்.

ஆம், எனக்கு பிரியமானவர்களே,

கடலையே கர்த்தர் பிளந்து, உனக்கு மதிலாக நிற்கச் செய்வார்.

அதைக்காட்டிலும், மிக முக்கியமாக **கடலின் வழியாக தரையில் கால்நடையாக, நடந்து போவாய்,** எத்தனை மகிழ்ச்சி

நீ மகிழ்ச்சியாக புறப்பட்டு செல்வதை ஜனங்கள் பார்ப்பார்கள். அது எத்தனை பேரானந்தம். எது உனக்கு பிரச்சினையாக இருந்ததோ, அதன் மத்தியிலும், பிரச்சினைகள் உனக்கு மதிலாக நிற்க, அதன் மத்தியில் நீ விடுதலையோடு கூட வீர நடை போடுவாய். அல்லேலூயா !

இரண்டாவதாக, பகலிலே மேகம், இரவிலே அக்கினி ஸ்தம்பம்

ஆம், கர்த்தருடைய பிள்ளையே,

சங். 91 : 5,6 சொல்கிறது,

இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும் பகலில் பறக்கம் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய். அல்லேலூயா !

ஏன் தெரியுமா ? கர்த்தர் உனக்கு பகலிலே மேகமாக இருக்கிறார், இரவிலே அக்கினி ஸ்தம்பமாக இருக்கிறார்.

அப்போ. 2 : 19 சொல்கிறது,

அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும், தாழ பூமியிலே இரத்தம் அக்கினி புகை காடாகிய அதிசயங்களையும காட்டுவேன்.

காரிருளில் நீ நடக்கும்போது கர்த்தர் வெளிச்சமாக இருப்பார்.

உன் வெளியரங்க வாழ்க்கையில் கர்த்தர் மேகத்தைப் போல இருப்பாய். உன் அந்தரங்க வாழ்க்கையில் அக்கினி ஜுவாலையைப் போல இருப்பார். அந்த அக்கினியானது பாவக் கறைகளை நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் தேவன் அறிகிறபடியினால் நம்முடைய வழிகளிளெல்லாம் கர்த்தரை நினைக்கும்பொழுது, நம்முடைய வழிகளிளெல்லாம் நம்மைக் காக்கும்படி நமக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். ஆமென்.

இரண்டாவதாக கர்த்தர் ஆயத்தம் பண்ணின
ஸ்தானத்துக்கு கொண்டு போவார்.

சில நேரங்களில் நாம் நினைக்கிற வேலைக்கு, தொழிலுக்கு, இடத்துக்குக் கொண்டு போவார் என நினைக்கிறோம். இதின் முக்கிய ரகசியம் என்னவென்றால் உண்மையாக தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபிக்கும்பொழுது,

கர்த்தர் ஆயத்தம் பண்ணின ஸ்தலத்துக்கு கொண்டு போவதற்கு தம்முடைய தூதனை நமக்கு முன்பாக அனுப்புவார்.

நீ நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று என்று தடுமாறும் சகோதரனே, சகோதரியே, நீ தேவனுடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்தபடியினால் '**நடந்ததே**' சரியானதாகும். நடந்ததைக் குறித்து கவலைப்படுவதை விட்டுவிட்டு, நடந்ததை எண்ணி எண்ணி தேவனைத் துதியுங்கள். ஆமென்.

கர்த்தர் ஆயத்தம் பண்ணின ஸ்தானம்

இது மிக முக்கியமான ஒரு ஆவிக்குரிய காரியமாயிருக்கிறது. யோவான் 14 : 1–3 வரை உள்ள வசனங்களில் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார்.

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு, அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன் ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்

கர்த்தர் ஆயத்தம் பண்ணின ஸ்தானம்

கர்த்தர் ஆயத்தம் பண்ணின ஸ்தலம்

கர்த்தர் ஆயத்தம் பண்ணின ஸ்தலத்திற்கு கொண்டு செல்ல நினைத்து இந்த பூலோகத்தில் ஒரு ஸ்தானத்தை கர்த்தர் உனக்கு வைத்திருக்கிறார்.